உ

# ஸ்ரீ பத்திரகாளியம்மன் காவியம், காளியம்மன் கும்மிப்பாடல்கள்




ஆக்கம் :

வைரமுத்து கணேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை



அகிலமெல்லாம் காத்துரட்சிக்கின்ற அன்னை பராசக்தியின் மெய்யடியார்களே! உங்கள் அனைவருக்கும் எனது அன்பு வணக்கம்.

நான் புலவனுமில்லை கவிஞனுமில்லையென்று இதற்குமுன் எழுதிய சிறுசிறு நூல்களில் குறிப்பிட்டுள்ளேன். ஆனால், எனது இஸ்ட்டகுல தெய்வங்களின் பெயரில் இதற்கு முன் எழுதியது போல் இப்போது அன்னை பத்திரகாளியம்மன் அருட்கடாட்சத்தால் ஸ்ரீ பத்திரகாளியம்மன் காவியம், காளியம்மன் கும்மிப் பாடல்கள் என்று ஒரு சிறு நூலை உருவாக்கியுள்ளேன். இதில் ஏதும் குற்றம் குறைகள் இருப்பின் கற்றோரும் மற்றோரும் என்னை மன்னிக்க வேண்டுமென்று மனமாரக் கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வண்ணம்

வைரமுத்து கணேசன்
கலைமகள் வீதி
சேனைக்குடியிருப்பு - 02
கல்முனை.
Te: 071 9238566

16.09.2009

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஸ்ரீ பத்திரகாளியம்மன் காவியம்

தெந்தன தென் னாதினன னாதெந்தினானா
தினனா தென் னாதினன னாதெந்தேனானா
தெந்தன தென் னாதினன னாதெந்தினானா
தினனா தென் னாதினன னாதெந்தேனானா

01. சொற்பனம் தன்னிலே சோதியாய்த் தோன்றி
சுடரொழிபோல் இருவிழியும் தானேதிறந்து
அற்புதமாய்அடியேனை எப்போதும் காக்கும்
ஆனைமுகா இக்கவிக்கு முன்னிற்க வேண்டும்

02. வேண்டுவதை விருப்பம்போல் ஈந்திடும் ஈசா
வேல் கொண்ட வேலனின் உபதேச சீசா
ஆண்டவனே அருட்கடலே அடியேன் என்மீது
அன்போடு அருட்பார்வை எப்போதும் பாரும்

03. பார்த்திடுவாய் பங்கயச் செல்வியென் தாயே
பாவாலே புதுமாலை அணிகின்ற தாயே
சாற்றுகின்ற கவிதைமுன் தாயே அமர்ந்து
சரஸ்பதியே எப்போதும் நாவில் நடம்புரிவாய்

04. புரியாத தெரியாத புலப்பட்டிராத
பூவையர்க் கரசியாம் காளியென்தாயே
தெரிந்தவரை சிற்யேனும் உன்புகழ் பாட
தெள்ழு தமிழ் தேனமுது அள்ளியே தருவாய்

05. தருவாயே நற்கவிதை சங்கிலித் தொடர்போல்
தத்துவ வித்தகியே உன்பெருமை கூற
அருள்வாயே ஆங்காரி மாகாளித் தாயே
அடியேன் செய்குறை குற்றம் அத்தனையும் பொறுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. பொறுக்காத ஆங்காரம் கொண்டவளும் நீயே
பொல்லாத அரக்கர்குலம் அழித்தவளும் நீயே
நறநறன உதிரபலி குடிப்பவளும் நீயே
நாயகியே பத்திர காளியென் தாயே

07. தாயேநீ பலவேஷம் தானே எடுத்து
தரணிவாழ் மக்களை கண்போலக் காத்து
ஓயாமல் அருள்மழை பொழிந்து வருகின்ற
ஓங்காரி பத்திர காளி என் அம்மா

08. அம்மாநீ ஏழுலகும் காப்பவளும் நீயே
ஆயிரம் கண்ணியாய் இருப்பவளும் நீயே
இம்மாநிலத்தையே தாங்கியே நிற்கும்
எக்கலா தேவியே எங்கள் குல தெய்வமே

09. குலதெய்வமாகி நீ உலகியே வந்து
குடிமக்கள் மண்டுமனை தன்னில் அமர்ந்து
பலபல அற்புதம் நிகழ்த்தி மகிழ்கின்ற
பாவையே பத்திர காளி மனமிரங்கு

10. இரங்கம்மா ஏழைகள் இடர்களை நீக்கி
இரவு பகல்பாராமல் இதயத்துள் அமர்ந்து
கரம் கூப்பிப் பணிவோர்க்கு காளிஎன்தாயே
கசிந்து மன மிரங்கியே கருணைதர வருவாய்

11. வருவாயே எதிரியை அழித்துநீ ஒளிக்க
வஞ்சனை செய்வோரை இல்லாதழிக்க
தருவாயே நற்பேறு தலைவியே காளி
தான்தோன்றி இடப்பாகம் பெற்றிட்டதேவி

12. தேவியே உன்நாமம் சொன்னாலே போதும்
தேடிவரும் தீவினைகள் பறந்துமே போகும்
கூவியே அழைப்போரின் குறைதீர்க்கும் காளி
குஞ்சரனைப் பெற்றிட்ட குலமாதே உமையே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. உமையாக உருமாறி இருப்பவளும் நீதான்
உள்ளத்தில் அமர்கின்ற கலைவாணி நீதான்
குறையாத பெரும் செல்வம் தருபவளும் நீதான்
குலங்காக்கும் துர்க்கையென வருபவளும் நீதான்

14. நீதானே கண்கண்ட தெய்வமே அம்மா
நினைத்ததும் பக்கத்தில் வந்திடும் அம்மா
மாதாவே மக்கள் குறை தீர்த்திடு அம்மா
மனம் நிறை நின்மதி தந்திடும் அம்மா

15. அம்மாநீ ஆங்காரம் கொண்டாலே போதும்
அதிருமே புலோகம் பாதாள மெல்லாம்
கம்மாநீ ஒருமுறை சிரித்தாலே போதும்
சுருதியின் ஓசை ஒலி எங்கும் ஒலிக்கும்.

16. ஒலிக்குதே காலிலே சதங்கை மணிகள்
ஓங்காரம் றீங்காரம் சங்கிதத் தோடு
சலிக்காமல் இருவிழியும் உன் நடனம்காண
தாயாரே திருநடனம் ஆடியருள் புரிவாய்

17. அருள்புரிவாய் பத்திரகாளி யென்தாயே
ஆங்காரி தமிழர்குலம் காத்தருளவேண்டும்
இருள் நீக்கி இன்புற்று வாழவழிகாட்ட
இரங்கம்மா மக்கள்மனம் எப்போதும்குளிர

18. குழிர்ந்தருள்வாய் அம்மாநீ கோபமெலாம் விட்டு
குடிமக்கள் தம்மீது கருணைமனம் கொண்டு
மகிழ்ந்திடுவாய் இடும்பூசை மனது மகிழ்ந்து
மாதாவே பத்திர காளியே அம்மா

19. அம்மாநீ அருட்பார்வை பாரம்மா தாயே
அடியார்கள் துயர் துன்பம் தீரம்மா நீயே
நம்பிடும் அடியாரை நாள்தோறும் காக்கும்
நாயகியே பத்திர காளியென் தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. தாயாரே நவராத்திரி நாயகியும் நீயே
தவறாமல் அதிகபலம் தருபவளும் நீயே
ஓயாமல் பெரும் செல்வம் தருபவளும் நீயே
ஒப்பற்ற கல்விக்கு அதிபதியும் நீயே


21. நீயின்றி ஓரணுவும் அசையாதே தாயே
நினைத்ததை நானெழுத வைத்தவளும் நீயே
சேய்செய்த குறைகுற்றம் பொறுத்தருளும் தாயே
செந்தமிழ் காவியம் இயன்றவரை புகன்றேன்

22. பகர்ந்ததில் பலகுற்றம் இருந்தாலும் தாயே
பரிவோடு எம்மீது கருணை மனம் கொண்டு
அகமகிழ்ந் தன்போடு அத்தனையும் பொறுக்கும்
அன்னையே பத்திரகாளியென் தாயே

23. தாயானபத்திர காளியும் வாழி
தாண்டவம் ஆடியசங்கரனும்வாழி
சேயான ஆனைமுகன் வேல்முருகன்வாழி
சேடன் மேல் துயில்கின்ற கேசவனும் வாழி

23. ஏர் உழவர் ஆவினங்கள் எப்போதும் வாழி
எழுதுகோல் ஏந்துவோர் ஏற்றமுடன் வாழி
ஊர் மக்கள் குடிமக்கள் ஒற்றுமையாய் வாழி
உலகத்தில் தமிழர்குலம் ஓங்கி நிதம் வாழி

24. அணுவுக்குள் அணுவான ஆதிசக்தி வாழி
அணுவளவும் அகலாத பராசக்தி வாழி
கணநேரம் விட்டகலா காரிகை வாழி
காளி என் தாயாரும் வாழ வாழியதே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவியம்மன் கும்மி

தந்தனத்தான தனதான - தன
தான தந்தனத் தானானா
தந்தனத்தான தனதான - தன
தான தந்தனத் தானானா

01. திருவாய் மலர்ந்து அருள் பொழியும் - எங்கள்
சித்தி விநாயகா வித்தகனே
கருப் பொருளே உன் தாழ்பணிந்தேன் - எந்தன்
கவிக்குக் காப்பாக வாருமையா

02. ஆதிசிவனே அருட்கடலே - புவி
அனைத்தும் காக்கும் முழுமுதலே
சோதி வடிவாக நின்றவரே - எங்கள்
சொக்க நாதரே வாருமையா

03. ஆறுமுகம் கொண்ட வேலவனே - இரு
அன்னையைப் பக்கமும் கொண்டவனே
ஏறு மயிலேறும் வித்தகனே - தமிழ்
என்றும் தருகின்ற உத்தமனே

04. கருடவாகனமும் கொண்டவரே - என்றும்
காக்கும் தொழிலுக் கதிபதியே
திருடியே வெண்ணை உண்டவரே - நல்ல
தித்திக்கும் நற்கவி தாருமையா

05. வெள்ளைக் கமலத்தே வீற்றிருந்து - பக்தர்
உள்ளமறிந்து வரமருளும்
தெள்ளுதமிழ்ச் செல்வ நாயகியே - எந்தன்
சிந்தையில் வந்து அமருமம்மா

06. கல்வி செல்வம் வீரம் என்னும் - நல்ல
கலை ஞானம் எல்லாம் எமக்களிக்கும்
வல்லமை கொண்டவள் துர்க்கையம்மா - என்று
வஞ்சியரே கும்மி கொட்டுங்கடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. பெற்றவளே பத்திரகாளியம்மா - நான்
பேசும் தமிழ் முத்து மாரியம்மா
கற்றிட நற்றமிழ் தாருமம்மா - எங்கள்
காரிகை கம்பகா மாட்சியம்மா

08. வெள்ளியும் செவ்வாயும் பூரணையும் - நீ
விரும்பும் நாட்கள் என்றுபக்தர்
உள்ளத்தில் வெள்ளையாய் வருவார்கள் - எங்கள்
உத்தமியே வரம் தாருமென்று

09. ஆபத்து வேளையில் கைகொடுக்கும் - எங்கள்
அன்னையே பத்திர காளியம்மா
நோவுவலியெலாம் தீர்ப்பதற்கு - தாயே
நொடியிலிப் போது வாருமம்மா

10. கற்பவதிக்குப் பரிகாரம் - காளி
கருணை கொண்டு நிறைவேற்றி
பெற்றகுழந்தைக்கும் பாலூட்டி - அவள்
பெயரும் வைத்துத் தருவாளாம்

11. அழகான வண்ணப்பட்டாடைகட்டி - காளி
அன்ன நடையும் தானடந்து
இழந்தளிர் பூப்போல வாறாளாம் - என்று
ஏந்திழையே கும்மி கொட்டுங்கடி

12. கும்பத்துமேலே அமர்பவளாம் - தாயார்
குலுங்கும் வேப்பிலைக் காரிகையாம்
குங்குமத் திலகம் கொண்டவளாம் - அன்னை
கோபாலன் தங்கையாய் வந்தவளாம்

13. செஞ்சடைப் பெருமான் நெஞ்சினிலே - என்றும்
சேர்ந்து இருக்கின்ற உத்தமியாள்
அஞ்சுகம் நல்கிடவாறாளென்று - பெண்ணே
அன்னையின் நாமத்தைக் கூறுங்கடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. பட்டாடைமீது கவனம்வைத்தால் - நம்ம
பத்திரகாளி சொற்பத்தில்
நட்ட நடுச்சாமம் சொல்லிடுவாள் - இது
நமக்குத் தேவை என்றிடுவாள்

15. அக்கினிப்பார்வையும் அவள்பார்ப்பாள் - காளி
ஆனந்தப்பார்வையும் பார்த்திடுவாள்
சிக்கலைத் தீர்த்திட வேண்டுமென்றால் - தாயார்
சின்னக் கண்ணோட்டம் செலுத்திடுவாள்

16. ஆங்காரி பத்திரகாளியம்மா - நீ
ஆனந்தத் தாண்டவம் ஆடுமம்மா
சிங்கவாகனம் சேர்ந்தாட - இப்போ
சிற்றிடையே நடனம்மாடுமம்மா

17. கொங்கைகுலுங்கி அசைந்தாட - அம்மா
கூந்தல் கலைத்து விரித்தாட
செங்கையில் சூலமும் சேர்ந்தாட - தாயே
சேவடிதூக்கி யாடுமம்மா

18. அரனோடு வாதாடி நின்றவளாம் - காளி
அக்கினிச் சொருபமாய் ஆனவளாம்
அசுரசங்காரமும் செய்பவளாம் - அன்னை
அன்போடு மக்களைக் காப்பவளாம்

19. கருணை மனம் கொண்டகாளியம்மா - எம்மை
காத்திட இப்போது வாருமம்மா
குருவாக உபதேசம் செய்யுமம்மா - எங்கள்
குலம்வாழ வரமும் தாருமம்மா

20. செந்தமிழ்ச் செல்வியே வாருமம்மா - இந்த
செகம்வாழும் மக்களைக் காருமம்மா
வந்தோரை வாழ்விக்கும் தேவியம்மா - எங்கள்
வாசல்மனை நோக்கிப் பாருமம்மா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. உன்னை நினைத்து வருவோர்க்கு - அம்மா
உறுதுணையாக நீயிருந்து
பொன்னும் பொருளும் தருபவளே - காளி
புவியில் வாழ்வோங்கச் செய்பவளே

22. புத்திரபாக்கியம் தாருமென்று - எங்கள்
புண்ணியசீலி உனைப்பணிந்தால்
சித்தம் மகிழ்ந்து அருள்பவளே - காளி
சிந்தை குளிரக் கொடுப்பவளே

23. செய்யும் தொழிலுக்கு கதிபதியே - காளி
தேசம்முழுதும் காப்பவளே
உய்யவளிகாட்டும் உத்தமியே - தேவி
உருவம் பலவும் கொள்பவளே

24. சொல்லுக்கு முன்னே வருபவளே - எங்கள்
சோதியே பத்திர காளியம்மா
நல்ல தமிழ்க்கவி தாருமம்மா - இந்த
நாயேனின்னும் எடுத்தோத

25. மாற்றானும் அஞ்சி நடப்பதற்கு - தாயே
மகிமை கொண்ட பத்தினியே
வேற்றுமையின்றிக் காப்பவளே - எங்கள்
வீரமாகாளித் தாயாரே

26. அக்கினிச் சொரூபமாய் நீயிருப்பாய் - அம்மா
ஆவேசக் கண்ணோடும் பார்த்திருப்பாய்
திக்கெட்டும் ஆட்சி புரிபவளே - காளி
தீயில் நடமாடும் சுடரொழியே

27. கூந்தலழகியே காளியம்மா - எங்கள்
குலம்காக்கநீயும் வாருமம்மா
சேர்ந்தார்க்குச் செல்லப்பிள்ளையம்மா - நீ
தேசம்புகழும் தேவியம்மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. மண்ணுண்டோன் தங்கையேவாருமம்மா - தாயே!
மனம்நிறை நிம்மதி தாருமம்மா
தன்னில் சரிபாதி தந்த பரமனின் - நல்ல
தாரமாய் வந்த தேவியரே

29. கேட்கும்வரமெல்லாம் தருபவளே - அம்மா
தேவையறிந்து அருள்பவளே
சூட்டும் மலருக் கதிபதியாம் - என்று
தோகையரே கும்மி கொட்டுங்கடி

30. மண்ணுக்கும் விண்ணுக்கும் பேரரசி - எங்கள்
மாதாவே பத்திர காளியம்மா
கண்போல மக்களைக் காத்தருளும் - தாயே
காமாட்சி மீனாட்சி மாரியம்மா

31. ஆயிரம் கண்ணுள்ள தேவியம்மா - பக்தர்க்
அருள் வளங்கும் காளியம்மா
பாயிரம்கேட்டு அகமகிழ்வாள் - என்று
பைங்கிளியே கும்மி கொட்டுங்கடி

32. பொன்னிறம் கொண்ட முகத்தழகி - தேவி
பூவையே பத்திர காளியம்மா
உன்மனம்போல வுன்வாழ்வுஎன்று - மக்கள்
உணர்த்தும் தேவியேவாருமம்மா

33. தீச்சட்டியேந்திக் கன்னியர்கள் - அம்மா
தீவினை தீர்த்திட வேண்டுமென்று
ஆச்சியுன் ஆலய வாசல்வந்தால் - தாயே
அத்தனை குறையும் தீர்ப்பவளே

34. அலகுவாயிலே குத்திக்கொண்டு - அம்மா
ஆரணங்கே உன்தன் வாசல்வந்தால்
பலபலதுயரெல்லாம்தீர்த்திடுவாள் - என்று
பாவையரே கும்மி கொட்டுங்கடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

35. அம்மாவெந்தன் வருகைதானறிந்தால்-தாயே
அன்போடு இல்ல வாசலிலே
கும்பம் நிறைகுடம் வைத்திடுவோமென்று
தோகையரே கும்மி கொட்டுங்கடி

36. சடையைவிரித்துப் போட்டவளாம் - காளி
சங்காரவதையும் செய்பவளாம்
இடையில்வாளோடு வாறாளென்று - இப்போ
ஏந்திழையே கும்மி கொட்டுங்கடி

37. சூலமும் வாளும் ஏந்திநிற்கும் - எங்கள்
சுந்தரியே பத்திர காளியம்மா
நாலான வேதத்தின் நாயகியே - வந்து
நற்பலன்கள்யாவும் தாருமம்மா

38. அருமருந்தாய் உனைநினைத்து - எந்தன்
அம்மையே உன்நாமம் நெஞ்சில்வைத்து
திருநீறு வைத்தாலே போதுமம்மா - எந்தந்
தீராத வினையும் தீர்ந்துவிடும்

39. அனைத்துயிர்க்கும் படியளிக்கும் - எங்கள்
அன்னையே பத்திர காளியம்மா
வினையகற்ற வாருமம்மா - நாங்கள்
விரும்பும் வரமும் தாருமம்மா

40. தமிழர்குலத்துக் குலக்கொழுந்தே - தாயே
தத்துவம் சொல்லும் வித்தகியே
அமிழ்தினும் இனிய சொல்லழகி - இந்த
அகிலம் காக்கும் வடிவழகி

41. கையில் சிலம்பும் கலகலக்க - அம்மா
காலில் சதங்கை மிக வொலிக்க
வையக மாந்தரைக் காத்தருள - நம்ம
மாதா வருகிறாள் பாருங்கடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42. கண்ணைப்பறிக்கும் மின்னலங்காரம் - தாயே
காணக்கண் கோடி வேண்டுமம்மா
பெண்ணரசி காளி வாருமம்மா - இன்னும்
புதுமைகண்டு மகிழ்வதற்கு

43. வானைப்பிளக்கும் வெடியோசை - தாயே
மத்தாப்பு குரவை ஓசைகளும்
இணையின்றியிப்போ முழங்குதம்மா - எங்கள்
ஈஸ்பரியே நீயும் வாருமென்று

44. மாவிலைத் தோரணம் கட்டிவைத்து - பக்தர்
மாதரசே நீயும் வாருமென்று
கூவி அரகரா கோசமிட்டுத் - தாயே
கும்பிட்டு நிற்பதைப் பாருமம்மா

45. பொய்யா மொழி கொண்டபத்தினியே - இந்த
புவனம் காக்கும் உத்தமியே
உய்ய வளிகாட்ட வாறாளென்று - இப்போ
உரக்கக்கும்மி கொட்டுங்கடி

46. அம்மையேயுன்தன் புகழ்பாட - தாயே
அறியேன் நானும் ஒருநாளும்
கும்பிட்டழுதேன் குலக்கொழுந்தே - நீயும்
கொஞ்சும் தமிழ்க் கவிதந்ததனை

47. பாரினில் வாழும் தமிழர்குலம் - இதை
பக்தியுடன் நித்தம் பாடிவந்தால்
காரியையே எங்கள் காளியம்மா - நீயும்
கருணை தந்திட வந்திடுவாய்

48. அறியாதமுடன் பாடிவைத்த - இந்த
அழகு செந்தமிழ்ப் பாக்களிலே
நெறிதவறிப் பிழையிருந்தால் - தாயே
நெஞ்சம் மகிழ்ந்து பொறுத்திடம்மா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எனது வெளியீடுகளாக இதுவரை...

01. சேனைக்குடியிருப்பு முத்துமாரியம்மன் பெயரில் பொன்னூஞ்சல், வைரவர் அகவல்.

02. அம்மன் அருட்பாகங்கள், ஆதிசிவன் அருட் காவியம்.

03. கொக்கட்டிச்சோலை தான்தோன்றிஸ்வரர் பத்து, மயானப்பத்து.

04. சேனைக்குடியிருப்பு முத்துவிநாயகர் பெயரில் கண்கொடுத்த கற்பகப்பத்து, திருக்குமரன் வரமருள் பத்து.

05. ஆழிப்பேரலையின் அனர்த்தக் காவியம்.

06. கதிர்காமக் கந்தன் பெயரில் வளிநடைப்பத்து, வளிநடைக்கும்மி.

07. கிட்டங்கிப் பிள்ளையார் பெயரில் பொன்னூஞ்சல்.

08. சேனைக்குடியிருப்பு முத்துமாரியம்மன் பெயரில் ஊர்வலக் கும்மி.

09. துறைநீலாவணை கண்ணகையம்மன் ஊர்வலக் கும்மி.

10. கதிர்காமக் கந்தன் பெயரில் வழிநடைப்பத்து, வழிநடைக்கும்மி.

11. தசவதாரம் கும்மிப் பாடல்கள்.

12. கண்ணப்பநாயனார் கும்மிப் பாடல்கள்.

13. காரைக்காலம்மையார் கும்மிப்பாடல்கள்.

14. சிந்தாயாத்திரைப் பிள்ளையார் வரலாற்றுப் பத்து
சீர்பாதகுல வரலாறுக் கும்மி.

B.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org